DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE FAST TRACK COURT (M.L)
UTHAMAPALAYAM

Case No. CC.No. 289 / 2023

Deposition of PW8/ LW10

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜான்பெஞ்சமின் |
| Father's Name | : | சுவாமிநாதன் |
| Village | : | நாகர்கோவில் |
| Taluk | : | நாகர்கோவில் |
| Calling | : | காவல்ஆய்வாளர் |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2024

**எதிரி ஆஜர் .**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1. நான் தற்போது நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணப்பு பிரிவு காவல்ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2017 ம் தேதி கூடலூர் வடக்கு காவல்நிலைய சார்பாய்வாளராக திரு.பாலசந்தர் பணியில் இருந்தபோது கம்பம் அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த செந்தில்குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று பின்னர் நிலையம் வந்து பார்வையிட்டு நிலைய கு.எண்.20/2017 ச.பி.294(பி), 332, 336, 326, 506(2) இ.த.ச மற்றும் 3(1) TNPPDL Act படி வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.**

2. பின்னர் வாதியின் புகாரையும், முதல் தகவலறிக்கையும் கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தமபாளையத்திற்கு அனுப்பி வைத்தும், வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை நான் கடந்த 21.01.2017 ம் தேதி விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவயிடமான கம்பம்– குமுளி மெயின்ரோட்டில் கூடலூர் அரசமர பஸ் நிறுத்தம் அருகே காலை 6 மணிக்கு சென்று சாட்சிகள் கதிரேசன், செந்தில் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகும்.**

**3.** பின்னர் அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் 6.45 மணியளவில் TN 57 N 2257 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் முன்பக்க

கண்ணாடியின் உடைந்த சில்கள் மற்றும் சிமெண்ட் கல் ஒன்றையும் அதே இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆகும்.** பின்னர் மேற்படி சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் தயார் செய்தேன்.

4. பின்னர் சம்பவயிடத்திலிருந்து 7.45 மணிக்க புறப்பட்டு கம்பம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த செந்தில்குமார், மற்றும் வீரமணி, கிருஷ்ணன், சின்னதம்பி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரி அசோகன் என்பவரை 21.01.2017ம் தேதி 10.00 மணிக்கு செல்வபுரம் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகும்**. TN 57 N 2257 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் முன்பக்க கண்ணாடியின் சேதமதிப்பு ரூ.4,500/- என்று சான்று வழங்கிய தனபாண்டியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **சேதமதிப்பு சான்று அ.சா.ஆ.10.**

5. இவ்வழக்கின் முதல் தகவலறிக்கை பதிவு செய்த சார்பாய்வாளர் பாலசுந்தர் அவர்களையும், காயம்பட்ட செந்தில்குமாருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசாத்அவர்களையும் விசாரணைசெய்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து 05.05.2017ம் தேதி வழக்கு பதிவு செய்த பிரிவுகளின்படி குற்ற இறுதியறிக்கை பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>1.</u> எதிரிக்கு சம்பவயிடத்தில் வீடு இல்லை 1/2 கி.மீ தூரம் தள்ளி அண்ணாநகரில் உள்ளது என்றால் சரிதான். எதிரி குடிபோதையில் அடிக்கடி தகராறு செய்பவர் என கூடலூர் வடக்கு காவல்நிலையத்தில் வழக்குகள் பல பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்திற்கு முதல் நாள் எதிரி வேறொரு வழகக்கில் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்தார் என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கில் சார்பாய்வாளர் என்னிடம் மேல் விசாரணைக்கு எப்போது ஒப்படைத்தார் என அவரது வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிகிச்சையிலிருந்த ஒட்டுனர் ஏற்கனவே புகார் எழுதி வைத்திருந்ததை சார்பாய்வாரளரிடம் கொடுத்தார் என்றால் சரிதான்.

2. சம்பவயிடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் இடையில் 50 மீ தூரம் இருக்கும் என்றால் 100மீ தூரம் இருக்கும். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்தை கடந்த மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். காயம்பட்டவர் புகார் கொடுப்பதற்கு முன்பு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். உடைக்கப்பட்ட பேருந்து சார்பாய்வாளர் சம்பவயிடம் செல்லும்போது சம்பவயிடத்தில் இருந்தது என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து

எத்தனை மணிக்கு தகவல் காவல்நிலையத்திற்கு கிடைக்கப்பட்டது என்றும், எத்தனை மணிக்கு காயம்பட்டவர் மேல்சிகிச்சைக்காக தேனி, அரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் என்ற விபரமும் இறுதியறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. சிகிச்சை அளித்த மருத்துவர் காயம்பட்டவருக்கு எந்த பல் எந்த அ ளவிற்கு உடைந்திருந்தது என கூறவில்லை என்றால் சரிதான். கம்பம் அரசு மருத்துவர் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்துள்ளார் என்றால் சரிதான். காயம்பட்டவர் மேல்சிகிச்சைக்கு சென்று அந்த சிகிச்சை அறிக்கை பெறப்பட்டால்தான் காயத்தின் தன்மை குறித்து சொல்லமுடியும் நான் அனுமானத்தின் அடிப்படையில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கம்பம், அரசு மருத்துவர் திரு.பிரதீப் அவர்கள் முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் பற்றி மட்டுமே போலீஸ் விசாரணையில் கூறியததாகவும், வேறு விதத்தில் கூறவில்லை என்றால் தவறு.

4. சம்பவம் நடந்த இடத்தில் லோடுமென் சங்கம், டீ கடை உள்ளதால் எப்போதும் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் என்றால் இரவு 10.45 மணி என்பதால் ஆட்கள் நடமாட்டம் இல்லை. நான் சம்பவயிடத்திற்கு மறுநாள் காலை 8.00 மணிக்கு சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லும்போது ஆட்கள் அதிகமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தில் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சம்பவயிடத்தில் இருந்த நபர்கள் சம்பவத்தை பார்க்காததால் எனது விசாரிக்கு முன்வராததால் நான் அவர்களை விசாரிக்கவில்லை. அவ்வாறு யார்யார் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் ஞாபகமில்லை.

5.எதிரியை சம்பவயிடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரிதான். இந்த எதிரிதான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதற்கு அடையாளம் அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. அன்றைய தினம் பேருந்தில் பயணம் செய்ததாக சொல்லப்படும் கிருஷ்ணன், சின்னதம்பி ஆகியோர்கள் பேருந்தில்தான் பயணம் செய்தார்கள் என்பதை காட்ட பயணசீட்டு ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. வழக்கு சொத்தான செங்கல் சம்பவயிடத்தில் எண்ணற்ற அளவில் கொட்டி கிடக்கிறது என்றால் சம்பவயிடத்திலிருந்து சற்று தூரத்தில் எண்ணற்ற அளவில் கிடைக்கிறது, வழக்கு சொத்தானது பேருந்திற்கு முன் பக்கம் கிடந்தது. பேருந்தின் கண்ணாடி பலமாக இருக்கும் என்றாலும், செங்கலால் தாக்கினால் கண்ணாடி எளிதில் உடைந்து அதை தாண்டி ஓட்டுனரை தாக்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

6. நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பேருந்தானது அரச மர பேருந்து நிறுதத்தில் நிற்காமல் செல்கிறது என்பதற்காக யாரோ பேருந்தின்மீது கல் ஏறிந்ததில் எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு

செய்யப்பட்டு புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது வழக்கினை பதிவு செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

Sd/-Thiru.P.Ramesh
Judicial Magistrate, Fast Track Court (M.L)
Uthamapalayam